# தோமஸ் லிக்கொனா கோட்பாட்டின்படி கம்பராமாயணத்தின் பாத்திர உருவமைப்பில் காணப்படுகின்ற நன்னெறிக் கூறுகள்

# Moral Elements in Kambaramayanam's Characterizations based on Thomas Lickona's Theory


கோ.சர்மிளா தேவி / G.Sharmila Devi[1]

பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் / Professor Dr.M.Rajantheran[2]



Date of submission: 2023-05-11
Date of acceptance: 2023-06-20
Date of Publication: 2023-07-30


Corresponding author's Name:
Dr. M. Rajantheran
Email: rajantheran@um.edu.my



## Abstract

The characterisation is crucial for keeping an epic or story's plot interesting and moving forward. It is the subtlety of the characterization that captures the attention and interest of the readers. The characterizations of many epics remain a bulwark of moral life even today. In this study, Rama's siblings Bharata, Lakshmana and Satrugna are explored in accordance with Thomas Lickona's theory (1991). This research has been carried out with a qualitative approach and analysed descriptively. It has been examined according to the hermeneutic interpretative approach. According to Thomas Lickona's theory (1991), the characterisation of Bharata, Lakshmana and Satrugna has been analysed using three components: moral knowing, feeling, and action. Therefore, this study highlights that moral knowledge, feelings, and actions are necessary to do good deeds without going off track.



**Keywords:** *Kambaramayanam*, Characterization, Moral elements, Thomas Lickona


## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் கம்பராமயணம் தன்னேரிலா பெருமையைப் பெற்றுள்ளது. அதே சமயத்தில் இஃது உலக மகா காப்பியங்களில் ஒன்றாகவும் திகழ்கின்றது. கம்பராமாயணம் கம்பரால் இனிய தமிழில் அளிக்கப்பெற்ற ஒரு தழுவல் காவியமானாலும் இக்காவியம் அசலைக் காட்டிலும் சிறந்தது என்கிறார் (கிவீஹ்ணீகூஷீ, 1965). கம்பராமாயணத்தை இயற்றியதன் மூலம் கவிச்சக்கரவர்த்தி கம்பர் அனைத்து தமிழ் புலவர்களிலும் தலைசிறந்தவராகப் போற்றப்படுகிறார். கம்பரைப் புகழாதோர் இல்லை என்று தான் கூற வேண்டும். தொடர்ந்து, கம்பனின் வரலாற்றை கு.அழகிரிசாமி இரத்தன சுருக்கமாக நான்கே வாக்கியங்களில் கூறுகின்றார்.

[1] கம்பர் என்ற ஒரு கவிஞர் தமிழ் நாட்டில் வாழ்ந்திருக்கிறார்.

[2] அவர் சோழ நாட்டிலுள்ள திருவழுந்தூரில் வாழ்ந்தவர்.

[3] அவர் இராமனுடைய கதையைக் காவியமாக இயற்றியவர்.


[1]The author is a postgraduate student in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. sharmilamani13@yahoo.com

[2]The author is a Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajanmun@um.edu.my

*[4] அவருக்கும் சடையப்ப வள்ளலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.* (Azhakirisaamy, 1958, p.17)

*அடுத்தப் படியாக, கம்பரின் காலம் தொடர்பான விடயம் பலவாறாக அறிஞர்களால் ஆராயப்பட்டுக் கூறப்படுகின்றன. எதுவாக இருந்த போழ்தினும் , கம்பர் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பதற்காகச் சான்று இராமாயணச் சுவடுகளில் கிடைக்கப்பெற்றுள்ளது.*

*"எண்ணிய சகாத்தம் எண்ணூற்று*

*ஏழின்மேல் சடையன் வாழ்வு*

*நண்ணிய வெண்ணெய் நல்லூர்*

*தன்னிலே கம்ப நாடன்*

*பண்ணிய ராம காதை*

*பங்குனி உத்த ரத்தில்*

*கண்ணிய அரங்கர் முன்னே*

*கவியரங் கேற்றினானே"*

*ஆக, மேற்குறிப்பிட்டுள்ள பாடல் வரிகள் கம்பர் 9 ஆம் நூற்றாண்டுகளில் தான் வாழ்ந்தார் என்பதனைச் சந்தேகத்திற்கிடமின்றி உறுதிபடுத்துகிறது (*Azhakirisaamy, *1958). கவிச்சக்கரவர்த்தி கம்பர் தமிழ் இனத்திற்குக் கிடைக்கப்பெற்ற ஓர் அரிய பொக்கிஷமாகவே போற்றப்படுகிறார். இம்மாமனிதனால் தமிழ் இனித்தது; தமிழால் இராமாயணம் சுவைக்கப்பட்டது. இன்றளவிலும் கம்பராமாயணம் தொடர்பான பல ஆய்வுகள் மேற்கொண்ட படியாக இருந்தாலும் இஃது இன்னும் பல ஆய்வுகளை மேற்கொள்ள வழிவகுக்கின்றது. இருந்த போழ்தினும் பல ஆய்வுகள் முதன்மை கதாப்பாத்திரங்களை மையமாகக் கொண்டே அமைகின்றன (*Ikmal, *2021). ஆக, இவ்வாய்வானது அக்கண்ணோட்டதிலிருந்து சற்று மாறுப்பட்டு இராமரின் உடன் பிறந்த தம்பிகளாகிய பரதன், இலக்ஷ்மணன் மற்றும் சத்ருக்னன் இவர்களின் பாத்திர உருவமைப்பை தோமஸ் லிக்கொனா கோட்பாட்டின் மூலம் ஆராயப்பட்டுள்ளது. தோமஸ் லிக்கோனா கோட்பாடு ஒருவர் தடம் புரளாது நற்செயல்கள் செய்வதற்கு நன்னெறி அறிவு மட்டுமல்லாது நன்னெறி உணர்வுகளும் நன்னெறி செயல்பாடுகளும் அவசியம் என்பதனை வழியுறுத்துகிறது. அவ்வகையில், இவ்வாய்வு தோமஸ் லிக்கோனா கண்டறிந்த மூன்று கூறுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.*

## முந்தைய ஆய்வு

*இவ்வாய்வு தலைப்பிற்குப் பொருத்தமான சில முந்தைய ஆய்வுகளை மூன்று கூறுகளின் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளன. அவ்வகையில் முதல் கூறானது கம்பராமாயணம் தொடர்பான ஆய்வுகளைக் காட்டுகிறது. கம்பராமாயணத்தைத் தொட்டு பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள படியால் ஆய்வாளர் தலைப்பையொட்டிய சில ஆய்வுகளை மட்டும் கண்ணோட்டமிட்டுள்ளார். அவற்றுள்* Individual Morality as Prescribed by Kambha Ramayanam *என்ற தலைப்பில்* P.Kavitha and S.Senthilkumar (2021 *அவர்களின் ஆய்வு ஆராயப்பட்டது. இவ்வாய்வேடு இராமர், சீதை, மாரிசன், கும்பக்கர்ணன் போன்றோர்களிடம் காணப்பட்ட பண்புநலன்களையொட்டி ஆராயப்பட்டுள்ளது. இக்கதாப்பாத்திரங்கள் ஒவ்வொன்றும் தங்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளை எத்தகையில் பண்புடன் கையாண்டுள்ளனர் என்பதை இவ்வாய்வேடு படம் பிடித்து காட்டியுள்ளது. இறுதியாக, ஆய்வாளர்கள் ஆய்வின் முடிவாக கம்பராமாயணத்திலுள்ள பல பாத்திரங்கள் நன்னெறி வாழ்க்கைக்கு ஒரு சிறந்த ஊன்றுகோலாக அமைகின்றன என வழியுறுத்துள்ளனர். இவ்வாறு இக்கூற்றின் அடிப்படையில் மொத்தம் ஒன்பது ஆய்வேடுகள் அலசி ஆராயப்பட்டுள்ளன.*

*தொடர்ந்து, இரண்டாவது கூறாக நன்னெறி தொடர்பான ஆய்வுகள் கண்ணோட்டமிடப்பட்டன. அவ்வகையில்,* An analisis of Moral Values of the Rainbow Troops Novel by Andrea Hirata' *என்ற ஆய்வேடு கருத்தில் கொள்ளப்பட்டது. இவ்வாய்வு* Afandi *(2018) அவர்களால் ஆராயப்பட்டுள்ளது.*

இவ்வாய்வேட்டில் ஆய்வாளர் The Rainbow Troops நாவலிலுள்ள முதன்மை கதாப்பாத்திரத்திடம் காணப்பெறுகின்ற நன்னெறிப் பண்புகளை ஐந்து கூறுகளில் மிகத் துல்லியமாக ஆராய்ந்துள்ளார். அவை தன்னிலை தொடர்பான நன்னெறிப் பண்புகள், சூழியல் தொடர்பான நன்னெறிப் பண்புகள், சமயம் தொடர்பான நன்னெறிப் பண்புகள், பண்பாடு தொடர்பான நன்னெறிப் பண்புகள் மற்றும் கல்வி தொடர்பான நன்னெறிப் பண்புகள் ஆகும். மேலும், ஆய்வாளர் இந்நாவலிலுள்ள முதன்மை கதாப்பாத்திரம் வருங்கால சந்ததினர்கள் பண்புடன் வாழ்வதற்கு ஏற்றாற் போல பல பண்பு நெறிகளைக் கொண்டு உருவமைக்கப்பட்டுள்ளது என்பதனை நிறுவியுள்ளார்.

மேலும், இது போன்ற நாவல்களை வாசிப்பதன் மூலம் பண்பார்ந்த வாழ்க்கையை மேற்கொள்ளலாம் எனவும் கூறியுள்ளார். ஆக, நாவல்களையும் காப்பியங்களையும் வாசிப்பதன் மூலம் ஒரு சிறந்த சமூகத்தை உருவாக்க முடியும் என்பது புலப்படுகிறது. அடுத்த மூன்றாவது கூறாக இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்ட தோமஸ் லிக்கொனா கோட்பாட்டைக் கருத்தில் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் Role of the family in formation of children characters based moral knowing, moral feeling, and moral action என்ற தலைப்பில் Witro et al. *(2020)* அவர்களால் ஆராயப்பட்ட ஆய்வு முன் நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வு ஒவ்வொரு குழந்தைகளும் நன்னெறி தொடர்பான புரிந்துணர்வை நன்னெறி அறிவு, நன்னெறி உணர்வு மற்றும் நன்னெறி நடத்தை மூலம் ஆழப்புரிந்து கொள்வதைக் குடும்ப உறுப்பினர்களால் உறுதி செய்ய வேண்டும் என்பதனை வழியுறுத்துகிறது. மேலும், நன்னெறி தொடர்பான அறிவு மட்டுமே ஒரு குழந்தை நன்னடத்தையுடன் வாழ்வதற்குத் துணை நிற்காது மாறாக நன்னெறி உணர்வும் மிக அவசியமாகத் திகழ்கிறது என்பதனை முன் நிறுத்தப்படுகிறது. நன்னெறி அறிவும் உணர்வும் இருக்குமாயின் அக்குழந்தை நிச்சயம் நன்னடத்தையுடன் செயல்படும் என்பதை தான் இவ்வாய்வு உறுதிப்படுத்துகிறது. ஆக, இவ்வாய்வில் வழியுறுத்தப்பட்டுள்ள இம்மூன்று கூறுகளை தான் ஆய்வாளர் தோமஸ் லிக்கொனா கோட்பாட்டின் அடிப்படையில் இராமரின் உடன் பிறந்த தம்பியர்களில் பகுப்பாய்வு செய்து ஆராய்ந்துள்ளார். ஆக, இத்தலைப்புக்கு ஏற்றாற் போல முந்தைய ஆய்வுகள் மேலே குறிப்பிட்டுள்ள கூறுகளில் அடிப்படையில் செவ்வன ஆராயப்பட்டுள்ளன.

## ஆய்வுச் சிக்கல்

பல ஆய்வுகளை ஆராய்ந்ததில் கிடைக்கப்பெற்ற தகவலானது கம்பராமாயணத்தில் கதாப்பாத்திரங்களிடையே காணப்படுகின்ற நன்னெறிப் பண்புகள் ஒட்டிய ஆய்வுகளே மிக அதிகமாகக் காணப்படுகின்றன (Arumugasami, 1992; Kavitha & Senthilkumar, 2021; Seiva Subramanimam, 2007) மேலும், நாவல்கள் மற்றும் காப்பியங்கள் தொடர்பான பல ஆய்வுகள் முதன்மை கதாப்பாத்திரங்களை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன (Ikmal, *2021)*. எனவே, ஆய்வாளர் இதன் மூலம் கிடைக்கப்பெற்ற இடைவெளியைப் பயன்படுத்தி ஒரு கதாப்பாத்திரம் எவ்வகையில் நன்னெறிக் கூறுகளின் அடிப்படையில் உருவமைக்கப்பட்டுள்ளன என்பதனை ஆராய்ந்துள்ளார். மேலும், இவ்வாய்வு கம்பராமாயணத்தில் துணைப்பாத்திரங்களாகவும் மிக முக்கிய பங்களிப்பாளர்களாகவும் திகழும் இராமனின் உடன் பிறந்த சகோதர்களாகிய பரதன், இலக்ஷ்மணன் மற்றும் சத்ருக்னன் ஆகியோரைக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

## ஆய்வின் முக்கியத்துவம்


தமிழ்இலக்கிய ஆய்வுகளுக்குஇஃதுஒருபுதிய கண்ணோட்டத்தைத் தரவல்லதாக அமையும். பொதுவாக ஒரு கதாப்பாத்திரத்திடம் காணப்படுகின்ற பண்புநலன்களை மட்டும் ஆராயாது அப்பாத்திரங்கள் அவ்வாறு செயல்படுவதற்காக நன்னெறிக் களம் எவ்வாறு தூண்டுகின்றன என்பதைக் கண்டறிய இவ்வாய்வு நிச்சயம் ஒரு புதிய வழியை வருங்கால ஆய்வாளர்களுக்கு நல்கும்

என்பது திண்ணம். தொடர்ந்து, இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ள தோமஸ் லிக்கொனா கோட்பாடு இடைநிலைப்பள்ளிக்கான நன்னெறிக்கல்வி கலைத்திட்டத்தில் ஒரு கூறாக வழியுறுத்தப்பட்டுள்ளது. ஆக, இவ்வாய்வு இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்கு பயனாக அமைவதோடு மட்டுமின்றி அப்பாடத்தைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கும் பயன்மிக்கதாகத் திகழும். ஆசிரியர்கள் இவ்வாய்வேட்டை நன்னெறிப் பாடத்தைக் கற்பிக்கும் போது ஒரு கற்றல் கற்பித்தல் ஆவணமாகப் பயன்படுத்தலாம். இறுதியாக, இவ்வாய்வு பொதுநிலையில் வாசிப்பவர்களுக்கும் ஒரு புதிய பார்வையை வழங்கும் என்பது வெள்ளியிடை மழை. ஒரு கதாப்பாத்திரம் ஏன் இந்நிலையில் செயல்படுகிறது, எவ்வாறான நன்னெறிக்கூறுகள் அவர்கள் இவ்வகையில் செயல்பட காரணமாக அமைகிறது போன்ற விடயங்களை இவ்வாய்வு தெளிவு பெறச் செய்யும்.

## ஆய்வின் அணுகுமுறை

இவ்வாய்வேடு கம்பராமாயணத்தில் இராமனின் உடன்பிறந்தவர்களாகிய பரதன், இலக்ஷ்மணன் மற்றும் சத்ருக்னன் அவர்களின் பாத்திர உருவமைப்பை தோமஸ் லிக்கொனா கோட்பாட்டின் (1991) படி ஆராயப்பட்டுள்ளன. இக்கோட்பாடானது மூன்று களத்தை முதன்மையாகக் கொண்டுள்ளன. அவை நன்னெறி அறிவு, நன்னெறி உணர்வு மற்றும் நன்னடத்தை ஆகும்.

வரைபடம் 1 : தோமஸ் லிக்கொனா கோட்பாடு





மூலம் : Educating for Character, Lickona (1991) என்ற நூலிலிருந்து மாற்றியமைக்கப்பட்டது

மேலும், இவ்வாய்வு பண்புசார் (qualitative) அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டு விளக்கப்படுத்தல் (descriptive) முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வு முழுமையும் ஹெர்மெனியூடிக் அணுகுமுறையின் படி (hermeneutic interpretative approach) ஆராயப்பட்டுள்ளது.

## தரப் பகுப்பாய்வு

இவ்வாய்வேட்டின் பகுப்பாய்வு மூன்று களத்தின் அடிப்படையில் மொத்தம் பதினைந்து கூறுகளைக் கொண்டு ஆராயப்பட்டுள்ளன. இப்பகுப்பாய்வு தசரதனின் குடும்ப வம்சாவளியின் அடிப்படையில் இராமனின் முதல் தம்பியாகிய பரதனிடம் தொடங்கி இலக்ஷ்மணன், சத்ருக்னன் என வரிசைகிரமாக உற்று நோக்கப்பட்டுள்ளன.


வரைபடம் 2 : தசரதனின் குடும்ப வரைபடம்




மூலம் : The Ramayana Tradition In Southeast Asia. Kuala Lumpur: Universiti Malaya. Singaravelu Sachithanantham (2004) என்ற நூலிலிருந்து ஆய்வாளரால் மாற்றியமைக்கப்பட்டது.

ஒவ்வொரு நன்னெறிக் கூறுகளும் கீழ்க்கண்ட கட்டமைப்பின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

*வரைபடம் 3 : பகுப்பாய்வின் கட்டமைப்பு*




*மூலம் : ஆய்வாளரால் வடிவமைக்கப் பட்டது.*

## நன்னெறி விழிப்புணர்வு (Moral Awarness)

ஒவ்வொரு மானிடனும் நன்னெறி தொடர்பான அறிவினைப் பெற்றிருப்பது அவசியம். ஒவ்வொரு செயல்களைச் செய்யும் போது தான் செய்கின்ற செயல்கள் தமக்கும் மற்றவர்களுக்கும் நன்மையைத் தரவல்லதா என்பதனை அறிந்து செயல்பட வேண்டும் என்கிறார் தோமஸ் லிக்கொனா (Lickona, *1991).*

| எண் | நன்னெறிக் கூறு / பாத்திரம் | நன்னெறி விழிப்புணர்வு |
|---|---|---|
| 1. | பரதன் | - இராமனைப் பிரிந்து தன் தாத்தாவைக் காண கேகய நாட்டிற்குச் செல்ல விருப்பம் இல்லாத போதும் தன் தந்தையின் சொல் மீறாது அவற்றை நிறைவேற்றுதல் (1; 21; 102) & (1; 22; 46-48) |
| 2. | இலக்ஷ்மணன் | - பெண்களைக் கொல்லுதல் பாவச்செயல் என்பதனால் சூர்ப்பணகையை அங்கபங்கம் செய்கிறார். (3; 5; 11-12), (3; 5; 45-49) & (3; 5; 90-93) |
| 3. | சத்ருக்னன் | - பரதனுடன் கேகய நாட்டிற்குச் செல்லுமாறு சொல்லப்படாத போழ்திலும் சத்ருக்னன் தன் அண்ணனைப் பிரியாது பின் தொடர்கிறான். (1;22;49) |

### பரதன்

கம்பராமாயணத்தில் இராமனின் முதல் தம்பியாக வலம் வருகிறான் பரதன். பண்புகளில் இராமனையே மிஞ்சும் ஒரு கதாப்பாத்திரம் இக்காப்பியத்தில் இருக்குமாயின் அது பரதனே. மேலும், பரதன் இராமனைக் காட்டிலும் மேம்பட்டவன் என்று பலரால் பாராட்டப்படுகிறான். இவனைப் பாராட்டாதவர்களே இல்லை எனலாம் (A.S.Nyanasambanthan, 1974). அப்பேர்பட்டவனிடம் நன்னெறி விழிப்புணர்வு இல்லாமற் போயிடுமா? பரதனின் நன்னெறி விழிப்புணர்வு தன் பெற்றோரின் சொல்லைக் கேட்டு நடக்க வேண்டும் என்ற பண்பில் காண முடிகிறது. இந்த நன்னெறி விழிப்புணர்வு பரதனிடம் இருந்த படியால் தான் அவன் தன் உயிராகக் கருத்தும் தன் அண்ணன் இராமனைப் பிரிய விருப்பம் இல்லாத போதும் தன் தந்தையின் சொல்லை மதித்து கேகய நாட்டிற்குச் செல்கிறான். அண்ணனைப் பிரிந்து செல்லுதலை உயிர் உடலை விட்டு பிரிந்து செல்வதாகக் கருதினாலும் தந்தையின் சொல்லைக் கேட்டு நடப்பதென்பது ஒரு மகனின் கடமையாகக் கருதுகிறான் பரதன்.

*ஏவலு மிறைஞ்சிப்போ யிராமன் சேவடி*

*பூவினைச் சென்னியிற் புனைந்து போயினான்*

*ஆவியங் கவனல தில்லை யாதலால்*

*ஓவலி லுயிர்பிரிந் துடல்சென் றென்னவே*

*(பாலகாண்டம்; பரசுராமப் படலம்; பா.48)* (Gopalakirushnamaccariyar, 1957b)

பெற்றோர் சொல்லை மதித்து நடத்தல் என்பது ஒவ்வொரு மானிடப் பிறவியும் பின்பற்ற வேண்டிய ஒரு பண்பாகக் கருதப்படுகிறது. அவ்வகையில் இப்பண்பைக் விளக்கும் திருக்குறள், பெரிய புராணம், கொன்றை வேந்தன் எனப் பல இலக்கிய சான்றுகள் நம்மிடத்தில் எண்ணற்ற அளவில் உள்ளன. திருஞானசம்பந்தப் பெருமான் தன் மூன்று வயதில் உமையம்மாளிடம் முலைப்பாலை அருந்திய ஞானக்குழந்தை ஆனார். ஆக, அஞ்ஞானக்குழந்தைக்குப் பூணூல் அணிவித்தல் நிகழ்ச்சியைச் செய்வதென்பது அவசியமற்றது. மேலும், தொல்காப்பியப் பாடல்,

*நூலே, கரகம், முக்கோல், மனையே*

*ஆயும் காலை அந்தணர்க்கு உரிய (தொல்; பொருள் மரபு; பா.71)* (Thavathiru uuran adigalar, 2003)

பூணூல் அணிவித்தல் என்பது ஒரு

குலத்தைக் குறிக்கின்ற செயலாக அமைகிறது என்பதைக் காட்டுகிறது. திருஞானசம்பந்தர் பொருத்த மட்டில் எல்லா உயிர்களும் ஒன்றே ஆகும். ஆக, திருஞானசம்பந்தருக்குப் பூணூல் அணிவித்தல் நிகழ்ச்சியில் உடன்பாடு இல்லை. இருந்த போழ்திலும் தன் தந்தையின் சொல்லை கேட்டு நடக்க வேண்டும் என்ற படியால் பூணூல் அணிவித்தல் நிகழ்ச்சிக்கு ஒப்புக் கொள்கிறார். ஆக, தந்தையின் சொல்லைக் கேட்டு நடக்க வேண்டும் என்பது ஒரு தலையாய கடமையாகக் கருதப்படுகிறது. அது மட்டுமா? எம் தமிழ் கிழவி ஔவையாரும் தந்தையின் சொல்லைப் கேட்டு பிள்ளைகள் நிச்சயம் நடக்க வேண்டும் என்பதனை வழியுறுத்தும் பொருட்டு

தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை *(கொன்றை வேந்தன் 37)* (Selvadurai Muralitharen, 2001) என்கிறார்.

எனவே, சுருங்கக் கூறின் தந்தையின் சொல்லைக் கேட்டு நடப்பதென்பது ஒவ்வொருவரும் நிச்சயம் பின்பற்ற வேண்டிய ஒரு நன்னெறிக் கூறாக இருக்கிறது. அவ்வகையில் கம்பராமாயணத்தில் பரதன் இந்த நன்னெறிக் கூற்றை மிக அழகாக வெளிப்படுத்தும் பாத்திரமாக வலம் வருகிறான்.

### இலக்ஷ்மணன்

இலக்ஷ்மணன் இராமனின் இரண்டாவது தம்பி என்பது நம் அனைவரும் அறிந்ததே. கம்பராமாயணம் முழுவதும் இராமனின் உயிருக்கு உயிராய் இருந்த ஒரு கதாப்பாத்திரம் தான் இலக்ஷ்மணன். இலக்ஷ்மணன் பெண்ணினத்தைக் கொல்லுதல் மாபெரும் குற்றம் என்ற நன்னெறி விழிப்புணர்வை மிக வைராக்கியமாகக் கொண்டுள்ள ஒரு ஆடவனாக வலம் வருகிறான். கம்பராமாயணம் முழுதும் பல அரக்கிகளை வதம் செய்யும் சூழல்களுக்கு இலக்ஷ்மணன் தள்ளப்பட்ட போதும் அவற்றைச் செய்வது குற்றம் என்ற படியால் செய்யாது அங்கபங்கம் மட்டுமே செய்கின்றான். இராமணனின் தங்கையாகிய சூர்ப்பணகை அசோகவனத்தில் இராமனைக் கண்ட மாத்திரத்தில் அவன் மீது காதல் கொள்கிறாள். அவனைத் தன் கணவனாக்கிக் கொள்ள முனைகிறாள். தன் எண்ணத்தை இராமனிடத்தில் தெரிவிக்க இராமன் அரக்கரை மனிதர் மணஞ்செய்யலாகா என்று கூறி அவளின் எண்ணத்தை நிராகிரிக்கின்றான். அச்சமயம் சீதை அங்கு வரவே, சூர்ப்பணகை தன்னுடைய எண்ணத்திற்குத் தடையாகச் சீதை இருப்பதை எண்ணி சீதையைக் கடத்தி செல்ல முயற்சிக்கும் போது இலக்ஷ்மணன் “நில்லடீ” எனக் கூறிக் கொண்டு அவ்விடத்திற்கு விரைந்து வருகிறான். பெண் கொலை பெரும்பாவம் என நினைத்து வில்லெடுக்காது சூர்ப்பணகையின் முடியைக் கையால் இறுகப் பற்றி அவளின் வயிற்றில் காலாலுதைத்து ஒளி விளங்கிய வாளை கையால் உருவியெடுத்து அவளின் மூக்கு, வாய் மற்றும் முலையை அறுத்து எறிகின்றான்.

நில்ல டீஇயெனக் கடுகினன் பெண்ணென நினைந்தான்

வில்லெடாதவள் வீங்கெரி யாமென விரிந்த

சில்ல லோதியைச் செங்கையிற் றிருகுறப் பற்றி

ஒல்வ யிற்றுதைத் தொளிகிளர் சுற்றுவா ளுருவி *(ஆரணியக்கண்டம்; சூர்ப்பணகைப்படலம்; பா.93)* (Gopalakirushnamaccariyar, 1957a)

ஊக்கித் தாங்கிவிண் படர்வனென் றுருத் தெழு வாளை

நூக்கி நொய்தினின் வெய்திழை யேலென நுவலா

மூக்குங் காதும் வெம் முரண்முலைக் கண்களு முறையாற்

போக்கிப் போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான் *(ஆரணியக்கண்டம்; சூர்ப்பணகைப்படலம்; பா.94)* (Gopalakirushnamaccariyar, 1957a)

இவ்விடத்தில் இலக்ஷ்மணன் எவ்வாறு கண்ட மாத்திரத்தில் ஒருவருக்குத் தண்டனை வழங்க முடியும் என்ற கேள்விகள் எழ வாய்ப்புகள் உண்டு. தண்டனை வழங்கும் முன்

தீர விசாரிப்பது தானே உத்தமம் எனக் கூறவும் இயலும். அரக்கர் குலத்தைச் சேர்ந்தவர் மிருகக் குணத்தைக் கொண்டவர்களாக இருப்பர். அவர்களுக்குப் புத்திமதியோ அறிவுரையோ கூறுவதென்பது வீண். தங்களுடைய ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள மற்ற உயிர்களைக் கொல்ல கூட தயங்காதவர்கள். (Wardhani - Muhadjir, 2017). இதனை நன்கு அறிந்த இலக்ஷ்மணன் காலம் தாழ்த்தினால் சீதையின் உயிருக்கு ஆபத்து என்பதனை உணர்ந்து இச்சூழலில் விரைந்து செயல்படுகிறான். இச்சூழலிலும் இலக்ஷ்மணன் தன் கோபத்தைக் கட்டுப்படுத்திப் பெண்ணைக் கொல்லுதல் மாபெரும் குற்றம் என்ற நன்னெறி விழிப்புணர்வை ஆழப்பற்றி கொண்டுள்ளான். இலக்ஷ்மணனின் இவ்விழிப்புணர்வு எங்கிருந்து பெற்றிருக்ககூடும் என்ற கேள்விக்குப் பதில் இராமன் தாடகையை வதம் செய்யுமாறு விஸ்வாமித்திரரே கூறியும் இராமன் அவளைக் கொல்லாது தயங்கி நிற்கும் செயல் தான் இலக்ஷ்மணனுக்கு இந்த விழிப்புணர்வைத் தந்திருக்க வேண்டும். நன்னெறி விழிப்புணர்வு என்பது ஒருவர் தங்களின் வாழ்வில் கடந்து வந்த சூழல்களின் அனுபவத்திலிருந்தே கிடைக்கப் பெறுகிறது (Reynolds & Miller, 2015). இருந்த போழ்தினும் இராமன் தாடகையைக் கொல்லுதற்குக் காரணம் வேள்விக்கு இடையூறு செய்யும் அரக்கர்கள் தவ வாழ்க்கைக்கு குற்றங்களாகக் கருதும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸர்யம் ஆகிய ஆறு குற்றங்களை விட கொடியவர்களாகக் கருதப்படுவர். ஆக, வேள்விக்கு இடையூறு செய்யும் அரக்கர்கள் மரண தண்டனைக்குரியவர் என்பதனால் தான் இராமன் தாடகையை வதம் செய்கிறான் (Gopalakirushnamaccariyar, 1957b).

மேலும், ஓர் உயிரைக் கொல்லுதல் என்பதே மாபெரும் குற்றம். ஒருவர் செய்கின்ற குற்றத்திற்கு மரணத் தண்டனை என்பது தண்டனையாகக் கருத இயலாது காரணம் அஃது ஒருவர் தான் செய்த தவற்றைத் திருத்திக் கொள்ள வழி வழங்காது (Lon, 2020). இருப்பினும், மரணத் தண்டனை என்பது ஒரு பழங்கால தண்டனையாகக் கருதப்படுகிறது. இன்றளவும் மரணத் தண்டனை ஒரு சில குற்றங்களுக்கு வழங்கப்பட்டு கொண்டு தான் இருக்கிறது காரணம் மரணத் தண்டனை மற்றவர்கள் அது போன்ற தவறுகளை இனி செய்யாமல் இருக்க ஒரு படிப்பினையாகக் கொள்ள இயலும் எனக் கருதப்படுகிறது (Hamenda, 2013). மேலும், திருக்குறளும் இந்த மரண தண்டனையை ஓர் உழவன் பசுமையான தன் நெல் வயலைப் பாதுகாக்கும் பொருட்டுக் களையை அகற்றுவதற்குச் சமம் என்கிறது.

கொலையிற் கொடியரை நேந்துஒறுத்தல் பைங்கூழ்

களைகட் டதனொடு நேர் குறள் 550 (Singaravelu Sachithanantham, 2013)

ஆக, மரணத் தண்டனை அக்காலத்திலும் இக்காலத்திலும் வழங்கக்கூடிய தண்டனையாக இருப்பினும் பெண்களைக் கொல்லுதல் பெரும்பாவம் என்ற படியால் இலக்ஷ்மணன் தான் கொண்டுள்ள நன்னெறி விழிப்புணர்வில் உறுதியாய் நிற்கின்றான். எனவே, இலக்ஷ்மணனும் ஆழ்ந்த நன்னெறி விழிப்புணர்வை கொண்டுள்ள ஒரு கதாப்பாத்திரமாகவே கம்பராமாயணத்தில் வலம் வருகிறான் என்பதனை நிறுவ முடிகிறது.

### சத்ருக்னன்

சத்ருக்னன் இராமனின் மூன்றாவது தம்பி; தசரதன் வம்சாவளியின் கடைக்குட்டி. ஒரு தொண்டூழியனுக்கான இலக்கணத்தை வகிக்கின்றான். அவ்வகையில், சத்ருக்னனின் நன்னெறி விழிப்புணர்வு தன் அண்ணன் பரதனுக்குத் தொண்டூழியனாக இருப்பதில் காணலாம். மகாராஜா தசரசன் பரதனைத் தன் தாத்தாவைக் காண கேகய நாட்டிற்குச் செல்லுமாறு கூறிய போது சத்ருக்கனையும் உடன் செல்லுமாறு பணிக்கப்படவில்லை. இருப்பினும், சத்ருக்னன் அண்ணனுடன் அனுதினமும் இருந்து தொண்டு செய்வதையே வாழ்க்கை கொள்கையாகக் கொண்டிருப்பதனால் அண்ணனைப் பின் தொடர்கிறான். அண்ணன் மீது சத்ருக்னன் கொண்டுள்ள விசுவாசம்

அண்ணனுக்காக எந்தத் தியாகத்தையும் செய்யும் அளவு இருந்தது. விசுவாசம் அல்லது பரிசுத்தமான அன்பு என்பது மற்றவர் இடத்தில் எந்தப் பிரதிபலனையும் எதிர்பாராது வைக்கப்படுவது ஆகும் (Darmalingam & Nadarajan, 2020). மேலும், உண்மையாகவும் நேர்மையாகவும் பிறர் மீது வைக்கப்படும் அன்பு தான் விசுவாசம் எனவும் குறிக்கப்படுகிறது (Hemamalini, *2018).* ஆக, பிரதிபலன் எதையும் எதிர்பாராது தன் அண்ணனுக்குச் சேவை செய்வது பொருட்டு தன் வாழ்வையும் தியாகம் செய்கிறான் சத்ருக்னன். பிறர் மீது கொண்டுள்ள விசுவாசத்திற்காக எதையும் செய்ய துணிய வேண்டும் என்கிற நன்னெறி விழிப்புணர்வு சத்ருக்னனிடம் இருந்த படியால் தான் திருமணம் முடிந்து மிதிலை வந்து சில நாள்களிலேயே தன் மனைவியைப் பிரிந்து தன் அண்ணனுக்காகச் சேவை செய்ய பின் தொடர்கிறான்.

உளைவிரி புரவித்தே ருதாசி தென்றெணும்

வளைமுரல் தானையான் மருங்கு போதப்போய்

இளையவன் றன்னொடு மேமு நாளிடை

நளிர்புனற் கேகய நாடு நண்ணினான்

*(பாலகாண்டம்; பரசுராமப் படலம்; பா.49)* (Gopalakirushnamaccariyar, 1957b)

### ஆய்வு முடிவு

இப்பகுப்பாய்வில் இராமனின் தம்பியர் மூவருமே நன்னெறி அறிவு என்கிற களத்தில் முதல் கூறான நன்னெறி விழிப்புணர்வை மிக ஆழமாகக் கொண்டுள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு கூறுகளையும் முழுமையாகப் பகுப்பாய்வு செய்ததில் பரதன் மற்றும் இலக்ஷ்மணன் இருவருமே தோமஸ் லிக்கொனா அவர்கள் வழியுறுத்திய பதினைந்து கூறுகளையும் கொண்டுள்ளனர் என்பதை ஐயத்திற்கு இடமின்றி சான்றுகளுடன் காட்டப்பட்டுள்ளன. ஆனால், சத்ருக்னன் ஐந்து கூற்றை மட்டுமே கொண்டுள்ளான் காரணம் கம்பராமாயணம் முழுமையும் சத்ருக்னன் தன் அண்ணன்களுக்குத் தொண்டூழியனாகவே வலம் வந்திருப்பதினால் அவனுக்காகச் சூழல்கள் இக்காப்பியத்தில் அதிக இல்லாமல் போயிற்று (Gopalaaiyar, 1995).

## References


Nyanasambanthan. A., S. (1974). *Thambiyar Iruvar.* Mercury Puthaga Company.

Afandi, L. (2018). An Analysis of Moral Values of the Rainbow Troops Novel by Andrea Hirata. *Journey: Journal of English Language and Pedagogy,* 1(1), 36-47.

Aiyar, V. V. S. (1965). *Kamba Ramayana.* Bharatiya Vidya Bhavan.

Arumugasami, K. (1992). *Kambaramayanathil Nithi Nerimuraigal* Bharathidasan University]. http://hdl.handle.net/10603/115531

Azhakirisaamy. (1958). *Kambaramayanam* Shakthi Kaariyalayam.

Darmalingam, A., & Nadarajan, D. (2020). பெரிய புராணத்தில் பக்தி (Devotional Norms (Bakthi) Depicted In Periyapuranam Text). *Journal of Tamil Peraivu* (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்), 9(2), 148-156.

Gopalaaiyar, T. V. (1995). Ramayanathil Thambiyar. Vanathi Pathippagam.

Gopalakirushnamaccariyar, V. M. (1957a). ***Sri Kambaramayanam Moonravathu Araniya Kandam.*** V.M.Gopalakirushnamaccariyar Company

Gopalakirushnamaccariyar, V. M. (1957b). *Sri Kambaramayanam Muthalavathu Pala Kandam*. V.M.Gopalakirushnamaccariyar Company.

Hamenda, V. L. (2013). Tinjauan Hak Asasi Manusia Terhadap Penerapan Hukuman Mati di Indonesia. *Lex Crimen*, 2(1).

Hemamalini, K. (2018). Nilai-Nilai Pendidikan Kesetiaan Devī Sāvitrī Dalam Vāna Parva. *Jurnal Pasupati*, 5(1), 28-47.

Ikmal, M. S. (2021). Kecenderungan Neurotisme melalui Karekteristik Emosional dalam Personaliti Watak Karya Kreatif. *Malay Literature*, 34(1), 119-142.

Kavitha, P., & Senthilkumar, S. (2021). Individual Morality as Prescribed by Kambha Ramayanam. *Journal of Tamil Peraivu*, 10(2), 93-100.

Lickona, T. (1991). What is Good Character? In Educating for character : *how our schools can teach respect and responsibility* (pp. 46-66). Bantam Books.

Lon, Y. S. (2020). Penerapan Hukuman Mati di Indonesia dan Implikasi Pedagogisnya. *KERTHA WICAKSANA*, 14(1), 47-55.

P.Kavitha, & S.Senthilkumar. (2021). Individual Morality as Prescribed by Kambha Ramayanam. 93-100.

Reynolds, S. J., & Miller, J. A. (2015). The recognition of moral issues: moral awareness, moral sensitivity and moral attentiveness. *Current Opinion in Psychology*, 6, 114-117. https://doi.org/10.1016/j.copsyc.2015.07.007

Seiva Subramanimam. (2007). *Nilai-nilai moral dalam karya Kambaramayanam : kajian dari perspektif sukatan Pendidikan Moral Sekolah Menengah* Universiti Malaya].

Selvadurai Muralitharen. (2001). *Nithi Noolgal Eelu*. Astraluxme Publication.

Singaravelu Sachithanantham. (2004). *The Ramayana tradition in Southeast Asia.* Penerbit Universiti Malaya.

Singaravelu Sachithanantham. (2013). *Thirukkural (trilingual).* Uma Publications.

Thavathiru uuran adigalar. (2003). *Saathiyum Mathamun.* Subam Printers, Sithambaram

Wardhani, N. W., & Muhadjir, N. (2017). Pendidikan Karakter Dalam Serat Tripama *Karya Mangkunegara IV. Jurnal Pembangunan Pendidikan: Fondasi dan Aplikasi,* 5(2), 187-198.

Witro, D., Putri, B. A., Putri, L. A., & Oviensy, V. (2020). Role of The Family in Formation of Children Characters Based Moral Knowing, Moral Feeling, and Moral Action. *Tunas Cendekia: Jurnal Program Studi Pendidikan Islam Anak Usia Dini,* 3(1), 97-103.